**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**<u>O.S. NO. 249/2022</u>**

**<u>13.10.2023 - வா.சா. 1 ராணி சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனக்கு 2 மகன்கள் மற்றும் 2 மகள்கள் உள்ளனர். என் மகள்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. என் மகன்களுக்கும் திருமணம் ஆகிவிட்டது அவர்கள் வெளியில் உள்ளார்கள். நான் என் கணவருடன் வசித்து வருகிறேன். 2016ல் இருந்து என் மகன் மணிகண்டன் வெளியில் இருந்து வருகிறார். அதன் பிறகு என் மூத்த மகனும் 2016 பெங்களூருக்கு சென்று விட்டார். நான் தவறாக சொல்கிறேன் என்றும், ஒரு மகன் என்னுடன் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. செல்வதுரை என்னுடன் பிறந்தவர். பொது அதிகாரப் பத்திரம் 2012 எழுதப்பட்டது அதைப்பற்றி எனக்கு நேரடியாக தெரியும்.

பொது அதிகார பத்திரத்தில் மொத்தம் 3 போர்ஷன்களை என் சகோதரர் செல்லதுரை என் கணவருக்கு எழுதிக் கொடுத்தார். வா.சா.ஆ.2 பொது அதிகார பத்திரத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. பொது அதிகார பத்திரம் பதிவு செய்யும் போது நான் பதிவு அலுவலகத்திற்கு செல்லவில்லை. வா.சா.ஆ.2ல் என்ன எழுதப்பட்டு இருந்தது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2ல் டி.எஸ். 45 சர்வே எண் கண்டுள்ளது என்றால் சரிதான். என் சகோதரர் செல்வதுரை வழக்கு சொத்திற்கு கிழக்கால் உள்ள சொத்தை 1988ல் காலிமனையாக கிரையம் பெற்று டி.எஸ்.45 மற்றும் 46ல் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

3 போர்ஷனில் எத்தனை ரூம்கள், ஹால் உள்ள விவரம் எனக்கு தெரியும். ஒவ்வொரு போர்ஷனிலும் ஒரு ஹால், ரூம், கிச்சன், பாத்ரூம், கிணறு உள்ளது. நான் தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் என் சகோதரர் செல்லதுரைக்கு அவசர தேவைக்காக 2012ல் ரூ. 4 லட்சம் கடன் கொடுத்து இருந்தார் என்றால் சரியல்ல. அந்த கடன் பொருப்பிற்காகத்தான் என் கணவர், செல்வதுரையிடம் இருந்து வா.சா.ஆ.2 பொது அதிகார பத்திரத்தை வற்புறுத்தி எழுதி வாங்கிக் கொண்டார் என்றால் சரியல்ல. உண்மையிலேயே பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்து இருந்தால் டி.எஸ் 45 மற்றும் 46 போட்டு

எழுதப்பட்டு இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு மற்றொரு சர்வே எண்ணை குறிப்பிட்டு சொல்லப்படாததால் பொறுப்பிற்காக வா.சா.ஆ.2 எழுதப்பட்டது தெளிவாகிறது என்று சொன்னால் சரியல்ல. மணிகண்டன் என் இளைய மகன்.

என் இளைய மகன் மணிகண்டனுக்கு வா.சா.ஆ.2 தேதியிலேயே என் கணவர் ஒரு கிரைய உடன்படிக்கை எழுதப்பட்டது என்று சொன்னால் சரிதான். என் மகன்கள் சரியில்லாத காரணத்தால் என் மீது கிரையப் பத்திரம் எழுதப்பட்டது. அச் சொத்தின் அரசாங்க மதிப்பு ரூ. 42 லட்சம் என்றும், வா.சா.ஆ.3 முன்னிலைக்கு ரூ. 14,57,000/- மோசடியாக கிரையப் பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2014ல் வா.சா.ஆ.3 தேதியில் என் மகன் மணிகண்டனுக்கு கிரைய உடன்படிக்கை பத்திரம் ரத்து செய்யப்பட்டு அதே தேதியில் என் பெயருக்கு கிரையப் பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் நடுபாகம் எனக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3ல் கிரையம் கொடுத்ததாக ஏழுதப்படவில்லை என்றும், பொதுவில் 3ல் 1 பாகம் கிரையம் கொடுத்ததாக கண்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.3 ஏற்பட்டதாக சொல்லும் தேதியில் மீது இருக்கும் பாகத்தை குறித்து என் மற்றொரு மகன் சேகர் மீது கிரைய உடன்படிக்கை எழுதப்பட்டது என்றால் சரிதான். பொறுப்பிற்காக எழுதிக் கொடுத்த பொது அதிகார பத்திரத்தை வைத்து நாங்கள் என் கணவரின் துணை கொண்டு இரண்டு கிரைய உடன்படிக்கைகள் மற்றும் கிரையப் பத்திரங்களை தயாரித்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்சொன்ன விவரங்கள் தெரியவந்த பிறகு செல்வதுரை 1.7.2014ல் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்து விட்டார் என்றால் சரியல்ல.

ரூ. 14,57,000/- பணத்தை செல்வதுரைக்கு கொடுத்து தான் அன்றைய தினம் கிரையம் பதிவு செய்யப்பட்டது. என் சகோதரருக்கு தெரியாமல் தான் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தற்போது பணத்தை அவரிடம் கொடுத்ததாகவும், என் அண்ணன் உடன் இருந்ததாகவும் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரருக்கு பணத்தை கொடுத்து விட்டதாக என் பிராதிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். கிரையத் தொகை எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும், என் சகோதரர் 18.4.2015ல் திருவண்ணாமலை காவல் நிலையத்தில் என்

மீதும் என் கணவர் மீதும் புகார் கொடுத்துள்ளார் என்றும் அந்த புகாருக்கு சி.எஸ். ஆர். நெம்பரும் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. போலீசாரும் எங்களை விசாரிக்கவில்லை. வழக்கிற்காக விசாரிக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பிரச்சனை ஏற்பட்ட பிறகு தவறாக என் சகோதரர் மீது ஒரு புகார் கொடுத்தோம் என்றால் 6 மாதத்தில் என் சகோதரர் வீட்டை காலி செய்து கொடுப்பதாக கூறினார். ஆனால் அவ்வாறு செய்யாமல் என்னை அடித்ததால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். வா.சா.ஆ.4 தவறான அடிப்படையில் நான் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/- ராணி

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.